# சுய பயிற்சிக் கையேடு

# முயற்சியாண்மைக் கல்வி

## தரம் 10



**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**



# தரம் 10 மாணவர்களுக்கான சுய பயிற்சிக் கையேடு

## முயற்சியாண்மைக் கல்வி 2020

(தரம் 10 இரண்டாம் தவணை பாடத்திட்டத்தை உள்ளடக்கியது)

**தயாரிப்பு:-**

**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

# முயற்சியாண்மை
# (Entrepreneurship)




## வினாக்கள்

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
- ❖ பல்தேர்வு வினாக்களுக்கு (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ பகுதி 11 வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

01. எண்ணங்களை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடல், சரியான தீர்மானமெடுத்தல் என்பவற்றினூடாக பொருளாதார சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் தனிநபரைக் குறிப்பது,
   (1) ஊழியர் (2) முகாமையாளர் (3) முயற்சியாளர் (4) தலைவர்

02. முயற்சியாண்மை என்பது தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) எதிர்காலத்தை மாற்றுவதற்காகத் தூண்டப்படுகின்ற தனி மனிதனின் மனநிலையாகும்.
   (2) எண்ணுகின்ற தர்க்கிக்கின்ற செயற்படுகின்ற முறை
   (3) இயல்பாகவே உரிமையாக்கிக் கொள்ள முடியாதது
   (4) தனிநபர்களின் நேர் மனப்பாங்கு, நடத்தை, திறன்களின் கூட்டாகக் காணப்படுவது

03. கமலன் என்பவர் தனது தந்தையரால் நடாத்தப்பட்ட வணிகத்தை தொடர்ந்து நடாத்திச் செல்கின்றார். குமரன் என்பவர் பல்வேறு வித்தியாசமான வடிவமைப்புக்களுடன் கூடிய தொப்பிகளை உற்பத்தி செய்து இலாபம் உழைத்து வருகின்றார். மேலே தரப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பின்வருவனவற்றுள் மிகவும் சரியான கூற்று எது?
   (1) கமலன் முயற்சியாளராகக் காணப்படும் அதேவேளை குமரன் ஒரு முயற்சியாளராகக் காணப்படவில்லை.
   (2) குமரன் முயற்சியாளராகக் காணப்படும் அதேவேளை கமலன் ஒரு வணிகராகக் காணப்படுகின்றார்.
   (3) இருவருமே முயற்சியாளராகக் காணப்படுகின்றனர்.
   (4) இருவருமே சமூக முயற்சியாளராகக் காணப்படுகின்றனர்.

04. முயற்சியாண்மை தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.

A. உற்பத்திக் காரணிகள் முயற்சியாளராலேயே நெறிப்படுத்தப்படுகின்றன.

B. முயற்சியாண்மை தனிநபர்கள் வயது முதிந்தோராகும் போது உருவாகின்ற திறனாகும்.

C. முயற்சியாளர் நட்ட இடரை ஏற்பவர் ஆவார்.

இவற்றுள் முயற்சியாண்மை தொடர்பான சரியான கூற்று எது?

(1) A யும், B யும் (2) A யும், C யும் (3) A, B, C ஆகிய எல்லாம் (4) B, C மட்டும்

05. முயற்சியாண்மை என்பது தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. எதிர்காலத்தை மாற்றுவதற்காகத் தூண்டப்படுகின்ற தனிமனிதனின் மனநிலையாகும்
2. எண்ணுகின்ற தர்க்கின்ற செயற்படுகின்ற முறை
3. இயல்பாகவே உரிமையாக்கிக் கொள்ள முடியாதது.
4. தனி நபர்களின் நேர் மனப்பாங்கு, நடத்தை, திறன்களின் கூட்டாகக் காணப்படுவது

06. எண்ணங்களை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடல், சரியான தீர்மானமெடுத்தல் என்பவற்றினூடாக பொருளாதார, சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் தனிநபர் ……………….. ஆவார்.

1. ஊழியர்  3. முகாமையாளர்
2. தலைவர்  4. முயற்சியாளர்




07. உற்பத்திக்குத் தேவைப்படுகின்ற மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள சகல வளங்களையும் குறிப்பது

1. நிலம்  3. உழைப்பு
2. மூலதனம்  4. முயற்சி

08. நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடும் வளம் ……………… ஆகும்.

1. நிலம்  3. மூலதனம்
2. உழைப்பு  4. முயற்சி

09. பாலன் என்பவர் புதிய வடிவமைப்பு மற்றும் அழகிய வர்ணப் பூச்சுகளுடன் கூடிய பிரம்பிலான தளபாடங்களை உதவியாளர் ஒருவரின் உதவியுடன் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றார். மேற்கூறிய விடயத்தில் இனங்காணக்கூடிய உற்பத்திக் காரணிகளை காட்டும் விடையினைத் தெரிக.

(1) மூலதனம், முயற்சி　　(3) முயற்சி, உழைப்பு
(2) நிலம், உழைப்பு　　(4) நிலம், மூலதனம்

10. உற்பத்திக்குப் பயன்படுத்தும் கட்டடங்கள், இயந்திர உபகரணங்கள், கருவிகள் என்பவற்றைக் குறிப்பது,

(1) மூலதனம்　　(3) நிலம்
(2) உழைப்பு　　(4) முயற்சி

11. கீழே நிரலானது x உற்பத்திக் காரணிகளையும் y நிரலானது உற்பத்திக் காரணிகளுக்குள் உள்ளடங்கும் விடயங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| x | y |
|---|---|
| அ. நிலம் | A. கணக்காளர் |
| ஆ. உழைப்பு | B. மாற்றமொன்றை ஏற்படுத்தல் |
| இ. மூலதனம் | C. மூலப்பொருட்கள் |
| ஈ. முயற்சி | D. கருவிகளும் , இயந்திரங்களும் |

உற்பத்திக் காரணிகளுக்கு பொருத்தமாக அவற்றுள் உள்ளடங்கும் விடைகளை இணைக்கும் போது பெறப்படும் விடையாக அமைவது

(1) C, A, D, B　　(2) A, B, D, C　　(3) B, D, A, C　　(4) D, C, A, B

12. உற்பத்திக்குத் தேவையான இயற்கையின் கொடையாகக் கிடைக்கப்பெற்றுள்ள சகல இயற்கை வளங்களையும் குறிப்பது,

(1) நிலம்　　(2) உழைப்பு　　(3) மூலதனம்　　(4) முயற்சி



13. முயற்சியாண்மைப் பண்புகளை மட்டும் உள்ளடக்கும் விடையினைத் தெரிவு செய்க.
(1) ஆக்கத்திறன், சுதந்திரத்தன்மை, வினைத்திறன்
(2) உற்பத்தித்திறன், புத்துருவாக்கம், எதிர்கால தூரநோக்கு
(3) வினைத்திறன், விளைதிறன், உற்பத்தித்திறன்
(4) புத்துருவாக்கம், சுதந்திரத்தன்மை, நேர்சிந்தனை

14. முயற்சியாளன் தனது நோக்கத்தை அடைவதற்காக தனிப்பட்ட தேவைகளை ஒதுக்கி வைத்து செயற்படும் பண்பைக் குறிப்பது,
(1) நெகிழும் தன்மை
(2) சுய ஊக்குவிப்பு
(3) பொதுவான தன்மை
(4) அர்ப்பணிப்பு

15. புதிய பொருட்கள் அல்லது சேவைகளை உருவாக்கக் கூடிய திறன் ............... ஆகும்.
1. ஆக்கத்திறன்
2. இடர்களை ஏற்றல்
3. புத்துருவாக்கம்
4. நேர் சிந்தனை

16. நடைமுறையில் காணப்படும் பிரச்சினைக்குத் தீர்வாக முயற்சியாளனின் எண்ணத்தினை சந்தைப்படுத்தக் கூடிய பொருள் அல்லது சேவையொன்றாக மாற்றுவது,
(1) ஆக்கத்திறன்
(2) புத்துருவாக்கம்
(3) எண்ணக்கருத்திறன்
(4) மானிடத் திறன்

17. பின்வருவனவற்றுள் ஆக்கத்திறனுக்கு தடையாக அமையும் காரணியாகக் கருதப்படக்கூடியது
(1) பல்லினத் தன்மையை உருவாக்கிக் கொள்ளல்
(2) ஆக்கபூர்வமான நடத்தைகளை பின்பற்றுதல்
(3) உடனடிப் பெறுபேற்றினை எதிர்பார்த்தல்
(4) தோல்விகளை சகித்துக் கொள்ளல்

18. வித்தியன் என்பவர் வீட்டுக் கழிவுப் பொருட்களை தரம் பிரிப்பதன் மூலம் வீட்டிலேயே மிக இலகுவான முறையில் இயற்கைப் பசளை தயாரிப்பதற்கு புதிய வகையான இயந்திரம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். இவரிடம் காணப்படும் புதிய வழிகளைத் தேடிக் கொள்வதற்கான திறனைக் குறிப்பிடுக.
(1) நட்ட இடர்களைப் பொறுப்பேற்றல்
(2) ஆக்கத்திறன்
(3) நெகிழ்வுத் தன்மை
(4) அர்ப்பணிப்புத் திறன்

19. பின்வருவனவற்றுள் ஆக்கத்திறனுக்குத் தடையாக அமையும் காரணி அல்லாதது,
(1) நம்பிக்கை, மனப்பாங்குகள் தொடர்பில் உறுதியான நம்பிக்கை வைத்திருத்தல்
(2) ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு மாத்திரமே இருப்பதாக எண்ணுதல்
(3) பிரச்சினைகளை சவாலாகக் காணுதல்
(4) உடனடி பெறுபேற்றினை எதிர்பார்த்தல்

20. புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளாவன,
(1) பொருள் அல்லது சேவையொன்ளை உற்பத்தி செய்தல்
(2) சேவையொன்றை மட்டும் அறிமுகப்படுத்தல்
(3) பொருட்கள், சேவைகளை இறக்குமதி செய்தல்
(4) புதிய கண்டு பிடிப்பு, நீடிப்பு, மற்றும் பின்பற்றுதல், கூட்டு

21. பேனை ஒன்றில் சிறியளவான மணிக்கூடு ஒன்றினைப் பொருத்தி உற்பத்தி செய்கின்றார்களெனின் இவ் உற்பத்தி புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் எதனை குறித்து நிற்கின்றது?
(1) நீடிப்பு (2) புதிய கண்டுபிடிப்பு (3) கூட்டு (4) பின்பற்றுதல்

22. புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் தற்போதுள்ள எண்ணக்கரு அல்லது காரணிகளுடன் புதிய கலவையொன்றைப் பயன்படுத்தி புதிய உற்பத்தியினை உருவாக்குவதைக் குறிப்பது,
(1) புதிய கண்டுபிடிப்பு
(2) பின்பற்றுதல்
(3) நீடிப்பு
(4) கூட்டு

23. புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் தற்போதுள்ள தற்போதுள்ள பொருள் அல்லது சேவை அல்லது செயற்பாடொன்றிலிருந்து புதிய பாவனையை உருவாக்குவதைக் குறிப்பது,
(1) புதிய கண்டுபிடிப்பு (2) நீடிப்பு (3) பின்பற்றல் (4) கூட்டு

24. பின்வரும் புத்தாக்க முறைகளுள் நீடிப்பு என்ற முறைக்கு உதாரணமாகக் கொள்ளமுடியாதது,
1. டிஜிட்டல் கமரா
2. சுயசேவை விற்பனை முறை
3. ஸ்மார்ட் கைத்தொலைபேசி
4. கொழுப்பற்றபால்

25. முயற்சியாண்மை தொடர்பாக நட்ட இடருக்கும், இலாபத்திற்கும் இடையிலான தொடர்பினை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
1. நட்ட இடர் உயர்வாயின் இலாபம் குறைவடையும்.
2. நட்டஇடர் குறைவாகக் காணப்படின் இலாபம் அதிகரிக்கும்.
3. நட்டஇடர் உயர்வாகக் காணப்படின் இலாபம் அதிகமாகக் காணப்படும்
4. நட்டஇடர், இலாபம் ஆகிய இரண்டும் சமனாகக் காணப்படும்

# முயற்சியாண்மை
## பகுதி 11

1) முயற்சியாண்மை என்பதற்கு பொருத்தமான வரைவிலக்கணம் தருக.
2) முயற்சியாளர் எனக் கருதப்படுபவர் யார்?
3) முயற்சியாண்மைப் பண்புகள் நான்கு தருக.
4) பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்புகளைக் குறிப்பிடுக
(அ) மதுரன் தனது தொலைபேசி விற்பனை செய்யும் வணிகத்தை நடாத்தும் போது தொழில் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வார்.
(ஆ) விமலா தனது ஆடைத் தொழிற்சாலையில் தனிப்பட்ட தனது தேவைகளை ஒதுக்கி வைத்து விட்டு நிறுவன வெற்றிக்காக செயற்படும் திறனைக் கொண்டவர்.
5) முயற்சியாண்மை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்பினைக் குறிப்பிடுக.
A) முயற்சியாளர் தாம் முயற்சிக்கும் கருமம் வெற்றியடையும் என நம்பிக்கை கொள்ளல்
B) எதிர்காலத்தில் எவ்வாறான ஒருவரைப் போல் வர வேண்டும் என தெளிவான இலக்கொன்று முயற்சியாளரிடையே காணப்படல்.
6) ஆக்கத்திறன் என்பதனால் கருதப்படுவது யாது?
7) ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் நான்கு தருக
8) ஆக்கத்திறனுக்குத் தடையாக அமையும் காரணிகள் நான்கு தருக.
9) புத்துருவாக்கம் என்பதனால் கருதப்படுவது யாது?
10) புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
11) புத்துருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் மூலாதாரங்களைக் குறிப்பிடுக.
12) நட்ட இடருக்கும், இலாபத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக
13) முயற்சியாளரின் ஆக்கபூர்வத்தன்மை, புத்துருவாக்கம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்பினைக் குறிப்பிடுக
14) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
A) உற்பத்திக் காரணிகள் முயற்சியாளரினாலேயே நெறிப்படுத்தப்படுகின்றன.
B) முயற்சியாண்மை செயற்பாட்டினை வயது குறைந்தோர் உருவாக்கிக் கொள்ள முடியாது.

15) முயற்சியாண்மை என்பது புதிய வணிகம் சார் எண்ணமொன்றை இனங்கண்டு அதனையொரு செயற்பாட்டு வணிகக் கருமமொன்றாக மாற்றும் திறனாகும். இதன் அடிப்படையில் முயற்சியாண்மைத் திறனை நடைமுறைப்படுத்துவதற்கு காணப்பட வேண்டிய மிக முக்கியமான பண்புகள் நான்கினைத் தருக.
16) தனி நபர்களிடம் காணப்படுகின்ற ஆக்க பூர்வத் தன்மையை மேலும் வளர்த்துக் கொள்ள எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்/ விருத்தி செய்து கொள்ள வேண்டிய இரு முறைகளைக் குறிப்பிடுக.
17) பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்புகளைக் குறிப்படுக.

I. முயற்சியாளர் ஒருவர் தேவைப்படும் சந்தர்ப்பங்களின்போது தனது தீர்மானங்களில் மாற்றம் செய்வதற்கு பின்னிற்க மாட்டார்.

II. முயற்சியாளர் ஒருவர் சூழலில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக அடிக்கடி அவதானத்துடன் இருப்பார்.

18) முயற்சியாளர் ஏன் நெகிழ்வுத்தன்மை கொண்டவராக காணப்படல் வேண்டும்? விளக்குக.

19) கீழே உற்பத்திக்கு பயன்படுத்தும் வளங்கள் சில தரப்படுகின்றன.

| | |
|---|---|
| கணக்காளர் | மாற்றங்களை ஏற்படுத்தல் |
| நீர் | கருவிகளும் இயந்திரங்களும் |
| மோட்டார் வாகனம் | மூலப்பொருள் |
| புத்துருவாக்கங்களை உருவாக்கல் | இயந்திர இயக்குனர் |

மேற்படி விடயங்களை கீழ் குறிப்பிடப்படும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

(அ) நிலம் (இ) மூலதனம்

(ஆ) உழைப்பு (ஈ) முயற்சி

20) பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் வளங்களை/ உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிடுக.

## முயற்சியாண்மைக்கும், வணிகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பு







01. நபர் ஒருவர் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான அடிப்படை அம்சங்களாக அமைவது,
 1. தேவைகள் 2. விருப்பங்கள் 3. பொருட்கள் 4. சேவைகள்

02. தேவைகள், விருப்பங்கள் தொடர்பான பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
 A. ஆரம்பத்திலேயே உருவாகுதல்
 B. பல்வேறுபட்டது
 C. முயற்சியாளர் அல்லது வணிகரால் உருவாக்கக் கூடியது
 D. வரையறுக்கப்பட்டது
 E. சகலருக்கும் பொதுவானது
 மேற்குறிப்பிட்டவற்றுள் தேவைகளின் பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகையினைத் தெரிவு செய்க.
 (1) B. C (2) A. D. E (3) B, C, D (4) A, B, C

03. பின்வருவனவற்றுள் தேவைகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
   (1) சோறு, பாதணி, குடிசைவீடு
   (2) உணவு, பாதணி, குடிசைவீடு
   (3) உணவு, உடை, உறையுள்
   (4) இடியப்பம், காப்பு, உறையுள்

04. விருப்பம் ஒன்றின் பண்பொன்றாகக் கருதப்படக் கூடியது,
   (1) ஆரம்பத்திலேயே உருவாகுதல்
   (2) சகலருக்கும் பொதுவானது
   (3) பல்வேறுபட்டது
   (4) வணிகர்களால் தோற்றுவிக்க முடியாது

05. தேவை ஒன்றின் பண்பொன்றாகக் கருதப்பட முடியாதது
   (1) ஆரம்பத்திலேயே உருவாகுதல்
   (2) பல்வேறுபட்டது
   (3) சகலருக்கும் பொதுவானது
   (4) வணிகர்களால் தோற்றுவிக்க முடியாது

06. மனிதர்களது தேவைகளை நிறைவு செய்கின்ற பல்வேறு முறைகளைக் குறிப்பது.
   1. சேவைகள்
   2. விருப்பங்கள்
   3. உற்பத்திகள்
   4. எண்ணங்கள்

07. பின்வருவனவற்றுள் விருப்பங்களை காட்டும் தொகுதியினைத் தெரிவு செய்க.
   1. உணவு, உடை, கல்வி
   2. உணவு, பொழுதுபோக்கு, தொலைத் தொடர்பு
   3. பால், புத்தகம் வாசித்தல், பாதணி
   4. ஆடை அணிகள், பாதுகாப்பு, கல்வி

08. ஒப்பந்த அடிப்படையில் வீடுகளை நிர்மாணிக்கும் வணிகமொன்றை விதுரன் நடாத்துகின்றார். இவ்வணிகத்தினூடாக இவர் நிறைவேற்றுவது,
   1. தேவை ஆகும்
   2. விருப்பம் ஆகும்
   3. கேள்வி ஆகும்
   4. சமூகப் பொறுப்பு ஆகும்.




09. சேவை ஒன்றின் பண்பினைக் குறிப்பது,
   1. பௌதீக நிலைப்பாடு காணப்படுதல்
   2. நுகர்வோர் உற்பத்திச் செயற்பாட்டிற்குத் தேவைப்பட மாட்டார்.
   3. வழங்குநரிடமிருந்து பிரிக்க முடியும்
   4. களஞ்சியப்படுத்த முடியாது

10. பின்வருவனவற்றுள் பொருள் ஒன்றின் பண்பாகக் கருதப்பட முடியாதது
(1) களஞ்சியப்படுத்த முடியாது
(2) பௌதீக நிலைப்பாடு காணப்படல்
(3) வழங்குநரிடமிருந்து பிரிக்க முடியும்
(4) ஒரே தன்மை கொண்டவை

11. பின்வருவனவற்றுள் சேவைகளின் பண்புகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) தொட்டுணரக் கூடியது, களஞ்சியப்படுத்தக் கூடியது
(2) தொட்டுணரக் கூடியது, களஞ்சியப்படுத்த முடியாதது
(3) வழங்குனரிடம் இருந்து பிரிக்க முடிதல், பாதுகாக்க முடியாதது
(4) தொட்டுணர முடியாதது, பௌதீக நிலைப்பாடு இல்லாதது

12. வணிகம் ஒன்றின் பண்பாகக் **கருதப்பட முடியாதது,**
(1) வளப் பரிமாற்றம் செய்தல்
(2) இலாபத்தை நோக்காகக் கொண்டே செயற்படல்
(3) பொருளாதார நடவடிக்கையொன்றாக அமைதல்
(4) நோக்கமொன்று காணப்படல்

13. முயற்சியாளர் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) புதிய முதலீடுகளினூடாக வணிகத்தை விரிவுபடுத்துபவர்
(2) போட்டியினை சவாலொன்றாக எடுப்பவர்
(3) பாரம்பரிய முறைகளை பின்பற்றுபவர்
(4) வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துபவர்

14. பெருகி வரும் பாத்தீனியச் செடி பெருகும் இடங்களை அழிப்பதற்கான துரித செயற்திட்டமொன்று அறிமுகம் செய்வதானது,
(1) சமூக முயற்சியாண்மையாகும் (3) உள்ளக முயற்சியாண்மை
(2) பூகோள முயற்சியாண்மையாகும் (4) வணிக முயற்சியாண்மையாகும்

15. முயற்சியாளர், வணிகர் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A. ஆதவன் தனது தந்தையால் நடாத்தப்பட்ட புடைவை வணிகத்தை அதேபோன்று இன்றும் நடாத்தி வருகின்றார்.
B. அன்பழகன் என்பவர் மூடப்படக் கூடிய நிலையிலிருந்த பாடசாலை ஒன்றை பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றாக மாற்றினார்.
C. கரன் என்பவர் தனது வணிகத்திற்காக பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத காரணத்தால் அதனை முடிவுறுத்தினார்.
D. உள்ளூரில் பனையோலைகளைக் கொண்டு அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் விமலன் என்பவர், வெளிநாட்டு சந்தையில் பிரவேசிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றார்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்கமைய முயற்சியாளராக கருதப்படக் கூடியவர்கள்
(1) ஆதவன், அன்பழகன் (2) கரன், விமலன் (3) அன்பழகன், விமலன் (4) அன்பழகன், கரன்

16. முயற்சியாண்மை மற்றும் ஆளுமைப் பண்புகள் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
அ. எத்தகைய தடைகள் வந்தபோதும் தனது நோக்கத்தை நிறைவேற்ற பின்னிற்க மாட்டார்கள்.
ஆ. எந்த ஒன்றையும் பொறுப்பேற்கும் இயலுமை காணப்படல்.
இ. தனது அதி உன்னத எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பொழுது தளர்வடைவர்.
ஈ. பிரச்சனையொன்றுக்குப் புதுவகையிலான தீர்வொன்றைத் தேடியறிவதிலும் பார்க்க ஏற்கனவே இருக்கின்ற தீர்வொன்றின் மூலம் திருப்தியடைவர்.
உ. சூழலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக அடிக்கடி அவதானத்துடன் இருப்பர்.

மேற்கூறியவற்றுள் முயற்சியாண்மைப் பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியாக அமைவது,

(1) ஆ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) ஆ, ஈ, உ (4) அ, ஆ, உ

17. முயற்சியாளருக்கும், வணிகர்களுக்கும் இடையிலான ஒற்றுமையாகக் கருதப்பட முடியாதது,
(1) பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
(2) சூழல் மாற்றங்களை இனங்கண்டு ஆக்கரீதியான புத்தாக்கங்களை முன்வைத்தல்
(3) வளங்களைப் பயன்படுத்தல்
(4) போட்டிக்கு முகங்கொடுத்தல்

18. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. முயற்சியாளர் ஒரு வணிகர் ஆவார்
2. முயற்சியாளர் ஒரு தொழில்வாண்மையாளர் ஆவார்.
3. முயற்சியாளர் ஒரு பகுப்பாய்வாளர் ஆவார்.
4. முயற்சியாளர் ஒரு வாய்ப்பைத் தேடுபவர் ஆவார்.

19. முயற்சியாண்மை தொடர்பாக சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றது.
❖ ஆதித்யன் என்பவர் தனது தந்தையிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்ற தொழிற்சாலையை விரிவுபடுத்தியதுடன் அதற்காக புதிய இயந்திரங்களையும் அறிமுகப்படுத்தினார்.
❖ அகல்யா என்பவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் உழைத்த தனது பணத்தை முதலீடு செய்ததன் மூலம் ஹோட்டல் ஒன்றைத் தொடங்கினார்.
❖ பார்த்தீபன் என்பவர் இயற்கை மூலிகை இலைகளை அடிப்படையாகக் கொண்டு சூழலுக்கு நேயமான நுளம்புச் சுருள்களை உற்பத்தி செய்து விநியோகித்தார்.
❖ ஆனந்தி என்பவர் சூரிய சக்தியால் இயங்கும் மின்குமிழ்களுக்கான ஆக்கவுரிமையை வெளிநாட்டிலிருந்து பெற்று அவற்றை உள்ளூர் சந்தைக்காக உற்பத்தி செய்து விநியோகித்தார்.

மேலே குறிப்பிட்டவர்களுள் ஒரு முயற்சியாண்மையாளராக எந்நபரை கருத முடியும்?

1. ஆதித்யன் 2. அகல்யா 3. பார்த்தீபன் 4. ஆனந்தி

20. வணிகர் மற்றும் முயற்சியாளர்களின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றது.
A. சூழல் மாற்றங்களை கவனத்தில் கொண்டு ஆக்கரீதியான புத்தாக்கங்களை உருவாக்குபவர்
B. தற்போதிருக்கும் நிலைமையில் வணிகத்தை நடாத்திச் செல்லல்
C. வணிகச் செயற்பாடுகளை இயற்கையாகவும், பாரம்பரிய முறையிலும் மேற்கொள்வார்
D. போட்டியினை விருப்பத்துடன் தேடிச் செல்பவர்
E. வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துபவர்
F. இயல்பாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சித்தல்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் முயற்சியாளர்களின் பண்புகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1. A, B, C 2. C, D, E 3. D, E, F 4. A, D, E

21. பின்வருவனவற்றுள் உள்ளக (நிறுவன) முயற்சியாளராக கருதப்படக் கூடியவர்
1. சில்லறை வியாபாரி
2. மொத்த வியாபாரி
3. சூழல் நேய பாடசாலை விருதினைப் பெற்ற பாடசாலை அதிபர்
4. தொற்று நோய்களை தடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துபவர்

22. பின்வருவோரில் முயற்சியாளராகக் கருதப்படக் கூடியவர்,
1. பாரம்பரிய சில்லறை வியாபார உரிமையாளர்கள்
2. போட்டிகளை எதிர்கொள்ளத் தயங்குபவர்கள்
3. வளங்களை மிகக் குறைந்த மட்டத்தில் பயன்படுத்துபவர்கள்
4. சிறப்புச் சந்தை வணிகத்தின் உரிமையாளர்கள்

23. பின்வரும் செயற்பாடுகளில் சமூக முயற்சியாண்மை செயற்பாடாகக் கருதப்படமுடியாதது,
   1. கிராமியக் கடனுதவித் திட்டம்
   2. தொற்று நோய்களை தடுப்பதற்கான வேலைத்திட்டம்
   3. ஊட்டச் சத்து குறைபாட்டினை நீக்குவதற்கான தாய்மார்களை விழிப்பூட்டும் செயற்திட்டம்
   4. சூழல் நேய பாடசாலை விருது பெற்ற அதிபர்

24. இலவசக்கல்வியின் தந்தை C.W.W கன்னங்கர என்பவர் ஒரு,
   1. வணிகர்களுக்கான முயற்சியாளர்
   2. சமூக முயற்சியாளர்
   3. பூகோள முயற்சியாளர்
   4. உள்ளக முயற்சியாளர்

25. சிறந்த சுற்றாடல் முகாமைத்துவத்திற்கான தரவிருதினைப் பெற்ற பாடசாலை அதிபர் எவ்வகை முயற்சியாளராகக் கருதப்படுவார்?
   (1) உள்ளக முயற்சியாளர்
   (2) சமூக முயற்சியாளர்
   (3) வணிகர்களான முயற்சியாளர்
   (4) பொருளாதார முயற்சியாளர்

# முயற்சியாண்மைக்கும், வணிகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பு
# பகுதி 11

01. வணிகம் என்பதனால் கருதப்படுவது யாது?
02. மனித தேவைகளின் பண்புகள் இரண்டு தருக.
03. தேவை, விருப்பம் என்பவற்றை விளக்குக.
04. வணிகருக்கும், முயற்சியாளருக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கு தருக
05. சமூக முயற்சியாளருக்கு இரண்டு உதாரணம் தருக
06. சமூக முயற்சியாளர் உள்ளக முயற்சியாளர் ஆகியோருக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
07. வணிகங்களின் பண்புகள் நான்கு தருக.
08. பொருட்களுக்கும், சேவைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
09. முயற்சியாளருக்கும் வணிகர்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் நான்கு தருக.
10. முயற்சியாளர்களின் வகைகளைக் குறிப்பிடுக.
11. சிவராமன் என்பவர் தனது விவசாய நடவடிக்கைகளுக்காக இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி உயர்விளைச்சலைப் பெற்றுக் கொண்டார். இவரை ஒரு முயற்சியாளராகவா? வணிகராகவா? கருத முடியும். உமது விடைக்கான காரணத்தைத் தருக.

**செயற்பாடு:- 01**

- **உங்கள் வீட்டுக்கு அண்மையில் அல்லது நீங்கள் வாழும் சூழலில் காணப்படுகின்ற வியாபார நிலையமொன்றை உதாரணமாகக் கொண்டு அவ்வணிகத்தில் காணக்கூடிய வணிகப் பண்புகளையும், முயற்சியாண்மைப் பண்புகளையும் பட்டியல்படுத்துக.**

**செயற்பாடு:- 02**

- **பின்வரும் முயற்சியாளர் வகைகளுள் எவ்வகை முயற்சியாளராக எதிர்காலத்தில் வர நீங்கள் விரும்புகின்றீர்கள்? காரணத்தை குறிப்பிட்டு விளக்குக.**
  **1. வணிக முயற்சியாளர் 2. சமூக முயற்சியாளர் 3. உள்ளக முயற்சியாளர்**

**செயற்பாடு:- 03**

- **உங்களது தேவைகளில் சிலவற்றைக் குறிப்பிட்டு, அத்தேவைகளை நிறைவு செய்ய பயன்படுத்தப்படும் பண்டங்கள், சேவைகளைக் குறிப்பிடுக.**

# முயற்சியாண்மையின் நன்மைகள்
## தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள்




செயற்பாடு 01:-
நீங்கள் அறிந்த தொழில் முயற்சியாளர் ஒருவரை இனங்கண்டு முயற்சியாளராவதன் காரணமாக,

1. அவரது வாழ்வில் கிடைத்துள்ள நன்மைகளை குறிப்படுக.
2. தேசிய பொருளாதாரத்திற்கு கிடைத்துள்ள நன்மைகளைக் குறிப்படுக.

செயற்பாடு 02:-

“தொழில் ஒன்றில் ஈடுபடுபவரைவிட, முயற்சியாளர் ஒருவராக இருப்பது அதிக நன்மைகளை வழங்கும்” என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.




01. முயற்சியாண்மை மூலம் முயற்சியாளர் ஒருவருக்குக் கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலமாக அமைவது,
   (1) புதிய பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தையில் அறிமுகப்படுத்தல்
   (2) சுதந்திரமும், மிக உயர்ந்த ஆத்ம திருப்தி கிடைக்கின்றமை
   (3) தன்னாதிக்கமுள்ள, சுதந்திரமான பொருளாதாரச் சமூகம் உருவாகுதல்
   (4) பிரதேச அபிவிருத்தி ஏற்படல்

02. முயற்சியாண்மை மூலம் முயற்சியாளருக்கு மட்டும் கிடைக்க கூடிய நன்மையாகக் கருதப்படுவது,
   (1) தேசிய வளங்கள் பயன்படுத்தப்படல்
   (2) பயன்படுத்தாத ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ளல்
   (3) பிரதேச அபிவிருத்திகள் ஏற்படுதல்
   (4) தொழில் வாய்ப்புக்கள் உருவாகுதல்

03. முயற்சியாண்மை மூலம் பொருளாதாரமொன்றிற்கு கிடைக்கும் அனுகூலமாக அமைவது,
   (1) பயன்படுத்தாத ஆற்றல்களை பயன்படுத்திக் கொள்ளல்
   (2) சமூகநலன் பொருட்டு பங்களிப்புச் செய்தல்
   (3) தேசிய வளங்கள் பயன்படுத்தப்படல்
   (4) கவர்ச்சிகரமான இலாபம் ஒன்றினை உழைத்தல்

04. முயற்சியாண்மை மூலம் முயற்சியாளர் ஒருவருக்கு கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலம்
   1. பிரதேச அபிவிருத்தி ஏற்படுதல்
   2. வேலைவாய்ப்பு அதிகரித்தல்
   3. சமூக அந்தஸ்து, அங்கீகாரம் கிடைத்தல்
   4. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்தல்

05. முயற்சியாண்மை மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கும் அதிகூடிய அனுகூலமாக அமையக் கூடிய விடையைத் தெரிவு செய்க.
   1. பணவீக்கத்தையும் பொதுவிலை மட்டத்தையும் கட்டுப்படுத்தல்
   2. வருமானப் பகிர்வில் ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படல்
   3. வேலைவாய்ப்புக்கள் சிறுஅளவில் அபிவிருத்தி அடைதல்
   4. மொத்த பொருளாதாரமும் அபிவிருத்தி அடைதல்

## முயற்சியாண்மையின் நன்மைகள்
## பகுதி 11

01. முயற்சியாண்மை மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக

02. முயற்சியாளர் ஒருவர் சமூக ரீதியாக செயற்படுவதால் பெற்றுக் கொள்ளும் நன்மைகளுக்கு இரண்டு உதாரணம் தருக

03. முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கின்ற நன்மைகள் நான்கு தருக.
04. முயற்சியாளர் ஒருவர் சமூக நலன் பொருட்டு பங்களிப்புச் செய்யக்கூடிய முறைக்கு நான்கு உதாரணம் தருக.
05. தற்போதைய கொரணா (கொவிட் 19) தொற்று நிலைமைகளின் போது உங்கள் பிரதேசத்தில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் சமூக பங்களிப்புக்களுக்கு நான்கு உதாரணம் தருக.

## முயற்சியாண்மையும், சிற்றளவு வணிகமும்

01. மலரவன் குறைந்த ஊழியர்களுடனும், குறைந்த மூலதனத்துடனும் ஓர் சொந்த வியாபாரமொன்றை நடாத்திச் செல்கின்றார். இவ்வணிகமானது,
   (1) பேரளவு வணிகமாகும்
   (2) நடுத்தரளவு வணிகமாகும்
   (3) சிற்றளவு வணிகமாகும்
   (4) சிறிய நடுத்தரளவு வணிகமாகும்

02. நுகர்வோர் தேவை மற்றும் விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியாத சந்தையொன்றின் பகுதியை (சந்தை இடைவெளி) சரியாக இனங்கண்டு அவற்றின் மூலம் வெற்றிகரமான வணிக வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்கு உதவியாக அமையும் வணிகம்,
   (1) பேரளவு வணிகம்
   (2) கூட்டுறவு வணிகம்
   (3) சிற்றளவு வணிகம்
   (4) நடுத்தரளவு வணிகம்

03. சிற்றளவு வணிகமொன்றின் பண்பாக அமையாதது,
   (1) குறைந்தளவான மூலதனம் ஈடுபடுத்தப்பட்டிருத்தல்
   (2) உள்நாட்டு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படல்
   (3) வணிகச் செயற்பாடுகளுக்கு குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்பு பெறப்படல்
   (4) ஊழியர் தொகை அதிகமாக இருத்தல்

04. முயற்சியாளர் ஒருவரின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை பிரயோக ரீதியாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் வணிகம்,
   (1) பேரளவு வணிகம் (2) நடுத்தரளவு வணிகம் (3) கூட்டுறவு வணிகம் (4) சிற்றளவு வணிகம்

05. சிற்றளவு வணிகம் ஒன்றின் பண்பாக அமைவது,
(1) முதலீடு உயர்வானதாக இருத்தல்
(2) ஊழியர் தொகை அதிகமாக இருத்தல்
(3) வணிகம் தனி ஒருவருக்கு உரிமையாக இருத்தல்
(4) சந்தைப்பரப்பு பாரியதாகவிருத்தல்

06. வணிக அமைப்பு வகைகளுள் அதிகமாகக் காணக்கூடிய வணிக அமைப்பு வகையாக அமைவது,
1. சிற்றளவு வணிகங்கள்
2. பேரளவு வணிகங்கள்
3. பல்தேசியக் கம்பனிகள்
4. நடுத்தரளவு வணிகங்கள்

07. பின்வருவன வணிகம் ஆரம்பிப்பது தொடர்பிலான சில ஆரம்ப படிமுறைகள் ஆகும். இவற்றுள் சிற்றளவு வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதலாவது படிமுறை எது?
1. மூலதனத்தைக் கண்டறிதல்
2. ஒரு சிறந்த வணிக எண்ணத்தை உருவாக்குதல்
3. ஒரு சந்தை அளவையாய்வை (Survay) மேற்கொள்ளல்
4. வணிகத்திற்கான இடஅமைவைக் கண்டறிதல்

08. சிற்றளவு வணிகமொன்றின் பண்பாக அமையாதது,
1. சிறிய தொகை மூலதனமிடப்பட்டிருத்தல்
2. ஊழியர் தொகை அதிகமாக இருத்தல்
3. வணிகம் பெரும்பாலும் தனி ஒருவருக்கே உரிமையாகவிருத்தல்
4. வணிகச் செயற்பாடுகள் சிறிய பிரதேசத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருத்தல்

09. சந்தையொன்றில் காணப்படும் சந்தை இடைவெளியை சரியாக இனங்கண்டு அவற்றின் மூலம் வெற்றிகரமான வணிக வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளும் வணிகம்,
1. நடுத்தரளவு வணிகம்
2. பாரியளவு வணிகம்
3. பல்தேசிய வணிகங்கள்
4. சிற்றளவு வணிகம்

10. சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான பிரதான காரணமாக அமைவது,
1. வணிக நடவடிக்கைகள் தொடர்பான அனுபவக் குறைவு
2. ஒரு வணிகர் தன்னை முயற்சியாளராக எண்ணாதிருத்தல்
3. சிறந்த மனிதத் தொடர்புகளைப் பேணாமை
4. அரச நிறுவனங்களிடமிருந்து உதவிகள் பெற்றுக் கொள்ளாமை

11. முயற்சியாளரின் வகிபாகங்களின் செயற்பாடுகளில் முகாமையாளர் என்ற வகிபாகச் செயற்பாட்டினைக் குறிப்பது,
(1) இலாபம் அல்லது நட்டத்தைப் பொறுப்பேற்றல்
(2) வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்.
(3) வேலையை செயற்படுத்தும் போது ஊழியர்களுக்கு வழிகாட்டுதல்
(4) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்.

12. முயற்சியாளரின் வகிபாகங்களின் செயற்பாடுகளில் தலைவர் என்ற வகிபாகச் செயற்பாட்டினைக் குறிப்பது,
(1) தன்னிடமுள்ள பணத்தை வணிகத்தில் ஈடுபடுத்தல்
(2) உயர்தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல்
(3) திட்டமிட்ட பெறுபேறுகளை உண்மையான பெறுபேறுகளுடன் ஒப்பிடல்
(4) வணிகத்தில் ஊழியர்களுடன் செயற்படும்போது அவர்களை வழிப்படுத்தி உரிய வழிகாட்டல்களை வழங்குதல்

13. முயற்சியாளரின் வகிபாகங்களின் செயற்பாடுகளில் உரிமையாளர் என்ற வகிபாகச் செயற்பாட்டினைக் குறிப்பது,
   (1) உயர்தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல்
   (2) தன்னிடமுள்ள பணத்தை இட்டு வணிகத்தை ஆரம்பித்தல்
   (3) திட்டமிட்ட பெறுபேறுகளை உண்மைப் பெறுபேறுகளுடன் ஒப்பிடல்
   (4) வணிகத்தில் ஊழியர்களுடன் செயற்படும் போது அவர்களை வழிப்படுத்தி வழிகாட்டல்களை வழங்குதல்

14. பின்வருவனவற்றுள் முயற்சியாண்மை நடவடிக்கைகள் மற்றும் முயற்சியாண்மை நடிபங்கு என்பவற்றை சரியாக இணைக்கும் விடையைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | வளங்களை நிறுவனத்தில் ஈடுபடுத்தல் | A. | முகாமையாளர் |
| 2. | வணிகத்திட்டம் தயாரித்தல் | B. | தலைவர் |
| 3. | ஊழியர்களை ஊக்கப்படுத்தல் | C. | உரிமையாளர் |

1. CAB  2. ABC 3. ACB  4. BAC

## முயற்சியாளர் விருத்தி செய்துகொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள்









## தொழில்நுட்பத் திறன்கள்





15. முயற்சியாளர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள் சில கீழே தரப்படுகின்றது.

A. இயந்திரங்களை சரியான இடத்தில் பொருத்துதல், இயக்குதல்

B. உபாய வழிமுறைகளைத் தீர்மானித்தல்

C. வணிகத்தின் போட்டித் தன்மைக்கு முகம் கொடுத்தல்

D. ஊழியர்களை ஊக்கப்படுத்தல்

E. சிறந்த ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல்

F. கூட்டம் நடாத்துதல்

மேலே குறிப்பிட்டவற்றுள் எண்ணகக்கருவாக்கத் திறன்களை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.

1. A, B 2. D, E 3. C, F 4. B, C

16. தும்பு தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான தேவன் என்பவர் புதிய தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி புதிய வடிவமைப்புகளுடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதுடன் புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடும் முயற்சியாளராவார். தேவனின் முயற்சியாண்மைத் திறனாகக் கருதக் கூடியது,

(1) எண்ணக்கரு ரீதியான திறன்

(2) மானிடத்திறன்

(3) தொழில்நுட்பத் திறன்

(4) தொடர்பாடல் திறன்

17. முயற்சியாளர் ஒருவரால் உருவாக்கக்கூடிய தொழில்நுட்பத்திறனுக்கு உதாரணமாக அமைவது,

(1) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்

(2) புதிய சந்தைவாய்ப்புக்களை தேடிக்கொள்ளல்

(3) சிறந்த ஊழியர்களை சேர்த்துக்கொள்ள இருக்கின்ற திறன்

(4) உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுபடல்

18. முயற்சியாளர் ஒருவரால் உருவாக்கக் கூடிய எண்ணக்கருவாக்கத் திறனுக்கு உதாரணமாக அமைவது

(1) சிறந்த ஊழியர்களை சேர்த்துக் கொள்ள இருக்கின்ற திறன்

(2) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்

(3) புதிய சந்தை வாய்ப்புக்களை தேடிக் கொள்ளல்

(4) உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுபடல்

19. முயற்சியாளர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள் சில கீழே தரப்படுகின்றது.

G. இயந்திரங்களை சரியான இடத்தில் பொருத்துதல், இயக்குதல்

H. உபாய வழிமுறைகளைத் தீர்மானித்தல்

I. வணிகத்தின் போட்டித் தன்மைக்கு முகம் கொடுத்தல்

J. ஊழியர்களை ஊக்கப்படுத்தல்

K. சிறந்த ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல்

L. கூட்டம் நடாத்துதல்

மேலே குறிப்பிட்டவற்றுள் எண்ணகக்கருவாக்கத் திறன்களை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.

1. A, B 2. D, E 3. C, F 4. B, C

20. முயற்சியாளர் தமது வணிகத்தின் எதிர்கால நடவடிக்கைகளை முறையாகத் திட்டமிடமிட வேண்டும். இத்திறனானது,

1. பகுப்பாய்வுத் திறனாக இனங்காணலாம்
2. மானிடத் திறனாக இனங்காணலாம்
3. தொழில்நுட்பத் திறனாக இனங்காணலாம்
4. எண்ணக்கருவாக்கத் திறனாக இனங்காணலாம்.

# முயற்சியாண்மையும், சிற்றளவு வணிகமும்
# பகுதி 11

01. சிற்றளவு வணிகங்களுக்கும், முயற்சியாண்மைக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக
02. பொருளாதார விருத்தியில் சிற்றளவு வணிகங்களின் பங்களிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
03. முயற்சியாளர் என்ற வகையில் அவர் செயற்படும் போது எவ்வாறான வகிபங்குகளை ஏற்கின்றார் என்பதைக் குறிப்பிடுக.
04. சிற்றளவு வணிகத்தை நடாத்திச் செல்லும் 'வைகுந்தன்' என்பவர் தனது முயற்சியாண்மைச் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது ஆற்றும் கடமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. தன்னிடமுள்ள பணத்தை இட்டு வணிகத்தை ஆரம்பித்தல்.
B. வணிகத்திட்டத்தை தயாரித்தல்
C. வணிகத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
D. ஊழியர்களை ஊக்கப்படுத்தலும் தேவையான வழிகாட்டல்களை வழங்கலும்.

மேற்கூறிய கடமைகளுக்கு பொருத்தமான முயற்சியாளர் வகிபங்குகளைக் குறிப்பிடுக.

05. பல்வேறு சிற்றளவு வணிகங்கள் ஆரம்பித்து சிறிது காலங்களிலேயே தோல்வி அடைகின்றன. அவற்றுக்கான காரணங்கள் இரண்டு தருக.

06. சிற்றளவு வணிகம் ஒன்றை ஆரம்பித்து நடாத்துதல் இலகுவாக காணப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டு தருக.
07. வணிகமொன்றை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைச் செயற்பாடுகள் நான்கு தருக.

08. சிறிய வணிகமொன்றில் காணப்படும் பண்புகள் நான்கு தருக.
09. சிற்றளவு வணிகங்களுக்கும், முயற்சியாண்மைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக
10. சிற்றளவு வணிகங்களினால் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
11. சிற்றளவு வணிகம் பலமாக செயற்படுவதற்கு சாதகமாக காணப்படும் காரணிகள் நான்கு தருக.
12. பெரும்பாலான சிற்றளவு வணிகங்கள் பல்வேறுபட்ட காரணங்களால் தோல்வி அடைகின்றன. வெற்றிகரமான முயற்சியாளரொருவர் தோல்வியடைவதற்கான காரணங்களை இனங்கண்டு வெற்றிகரமான தீர்வுகளைப் பெற்று வணிகத்தை நடாத்திச் செல்ல வேண்டும். வணிகம் ஒன்றை வெற்றிகரமாக நடாத்திச் செல்ல பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
13. பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா? என்பதைக் குறிப்பிடுக.
    I. சிற்றளவு வணிகங்கள் அவை முதலீடு செய்துள்ள மூலதனத்தின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே அறிமுகப்படுத்தப்படுகின்றன.
    II. வெற்றிகரமான பெரும்பாலான வணிக முயற்சியாளர்களின் முதலாவது ஆரம்பம் பேரளவு வணிகங்களாகும்.
    III. முயற்சியாளர் ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக
14. முயற்சியாண்மையாளர் உரிமையாளர் என்ற வகையில் தனது வணிகத்தினுள் நிறைவேற்றும் கருமங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
15. முயற்சியாளரின் முகாமைத்துவ வகிபாகம் என்பதனால் கருதப்படுவது யாது?
16. முயற்சியாளர் ஒருவரின் எண்ணக்கரு ரீதியான திறன்கள் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
17. முயற்சியாளர் ஒருவரின் முன்மாதிரியாகச் செயல்படும் திறன்களுக்கு இரண்டு உதாரணம் தருக.
18. கீழே சில வணிகக் கருமங்கள் தரப்படுகின்றன.
    I. ரூ 50000 தொகையினை வணிகத்திலிடல்
    II. தமக்குரிய விடுமுறைகளை (Leave) எடுக்காது வேலை செய்தவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை வழங்குதல்

    மேற்குறித்த வணிகக்கருமங்களுக்குப் பொருத்தமான முயற்சியாளர் வகிபங்குகளைக் குறிப்பிடுக.

# வணிகச் சூழல்

01. வணிகச் செயற்பாடுகளின்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் சக்திகள் அனைத்தையும் குறிப்பது,
(1) வணிக எண்ணம் (3) வணிக வாய்ப்பு
(2) வணிகச் சூழல் (4) வணிக அச்சுறுத்தல்

02. பின்வருவனவற்றுள் அகச்சூழல் காரணியாகக் கருதப்பட முடியாதது,
(1) மக்கள் சூழல் (3) முகாமையாளர்
(2) உரிமையாளர் (4) ஊழியர்

03. பெற்ற கடனுக்கு அதிக வட்டி செலுத்த வேண்டியுள்ளமை வணிகத்திற்கு ஒரு,
(1) வாய்ப்பாகும் (3) பலமாகும்
(2) அச்சுறுத்தலாகும் (4) பலவீனமாகும்

04. புறச்சூழல் காரணிகளில் வணிகத்திற்கு மிகவும் நெருக்கமாகச் செயற்படுகின்ற சக்திகளை உள்ளடக்கிய சூழலைக் குறிப்பது,
(1) பொருளாதாரச் சூழல் (3) இயற்கைச் சூழல்
(2) மக்கட் சூழல் (4) அண்மிய சூழல்

05. பூகோளமய சூழல் காரணமாக வெளிநாட்டு உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தைகளில் அதிகமாகக் காணப்படுவது உள்நாட்டு வணிகர்களுக்கு ................................... ஆகக் காணப்படும்.
(1) அச்சுறுத்தல் (3) பலம்
(2) வாய்ப்பு (4) பலவீனம்

06. முயற்சியாளர் ஒருவர் தனது பலவீனங்களை அறிந்து கொள்வதற்காக பகுப்பாய்வு செய்யும் சூழலாக அமைவது,
(1) அண்மிய சூழல் (3) பொருளாதாரச் சூழல்
(2) அகச் சூழல் (4) புறச் சூழல்

07. ...................................... சூழலை அடிப்படையாகக் கொண்டே பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான சந்தை வடிவமைக்கப்படுகின்றது.
(1) இயற்கைச் சூழல் (3) மக்கட் சூழல்
(2) விஞ்ஞான தொழில்நுட்பச் சூழல் (4) பொருளாதாரச் சூழல்

08. பின்வரும் வணிகச் சூழல் தொடர்பான கூற்றுக்களில் நவீன வணிகச் சூழல் பற்றி சரியாக வெளிக்காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) தேவைகளும் விருப்பங்களும் விரிவடைந்து காணப்படல்
(2) இலாபம் முக்கிய குறிக்கோளாக இருத்தல்
(3) போட்டி குறைவாகக் காணப்படல்
(4) வணிகர்கள் பலமுடையவர்களாக இருத்தல்

09. வணிகமொன்றிற்கு மூலதனத்தை ஈடுபடுத்துபவர் ........................ ஆவார்.
(1) உரிமையாளர் (2) ஊழியர் (3) தலைவர் (4) முகாமையாளர்

10. வணிகமொன்றின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளப்படுவது,
(1) பலம், பலவீனம் (2) பலம், வாய்ப்பு
(3) வாய்ப்பு, அச்சுறுத்தல் (4) பலவீனம், அச்சுறுத்தல்

11. பின்வருவனவற்றுள் அண்மிய சூழல் காரணியாகக் கருதப்படுவது,
(1) உரிமையாளர் (2) போட்டியாளர்கள் (3) முகாமையாளர் ஊழியர்

12. வணிகச் சூழல் வகைகள் சில கீழே தரப்படுகின்றன

A- உரிமையாளர்

B- பொருளாதாரச் சூழல்

C- பூகோளச் சூழல்

D- ஊழியர்

E- அரசியல் சூழல்

F- முகாமையாளர்

மேற்குறிப்பிட்டவற்றுள் புறச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடை தொகுதியாக அமைவது,

(1) B,C,E (2) A,D,F (3) B,D,F (4) C,E,F

13. பின்வருவனவற்றுள் அண்மிய சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினை தெரிவு செய்க.

(1) பொருளாதாரச் சூழல், சட்டச் சூழல், வாடிக்கையாளர்

(2) ஊழியர், முகாமையாளர், வாடிக்கையாளர்

(3) வாடிக்கையாளர், வழங்குநர்கள், போட்டியாளர்கள்

(4) பூகோளச் சூழல், பொருளாதாரச் சூழல், இயற்கைச் சூழல்

14. வணிகச் சூழல் காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.

A. வாடிக்கையாளர் C. உரிமையாளர் E. ஊழியர்கள்

B. போட்டியாளர்கள் D. வழங்குநர்கள்

மேற்கூறப்பட்டவற்றுள் புறச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A, B, C 2) B, C, D 3) C, D, E 4) A, B, D

15. வணிகமொன்றின் அகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் …………………….. …………………….. என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்

(1) பலம், பலவீனம் (3) பலம், வாய்ப்பு

(2) வாய்ப்பு, அச்சுறுத்தல் (4) பலவீனம், அச்சுறுத்தல்

16. பின்வரும் சூழல் காரணிகளுள் அகச் சூழல் காரணியாக கருதப்படக் கூடியது

1. வளம் 3. பொருளாதார சூழல்

2. மக்கள் சூழல் 4. பூகோளச் சூழல்

17. வணிக நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற அதே வேளை வணிகத்திற்கு வெளியே காணப்படும் அனைத்துக் காரணிகளையும் உள்ளடக்குவது

1. அண்மிய சூழல் 3. புறச் சூழல்

2. வணிகச் சூழல் 4. அகச் சூழல்

18. வணிகமொன்றின் புறச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் …………………….. …………………….. என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்

1. பலம், பலவீனம் 3. பலம், வாய்ப்பு

2. வாய்ப்பு, அச்சுறுத்தல் 4. பலவீனம், அச்சுறுத்தல்

19. நிரல் A ஆனது அகச் சூழல் காரணிகளையும், நிரல் B ஆனது அவர்கள் வணிகத்திற்கு பங்களிப்புச் செய்யும் முறையையும் காட்டுகின்றது.

| A | B |
|---|---|
| 1. உரிமையாளர் | P. உடல், உள உழைப்பை ஈடுபடுத்துபவர்கள் |
| 2. ஊழியர் | Q. வளங்களை ஒருமுகப்படுத்தி நோக்கங்களை அடைதல் |
| 3. முகாமையாளர் | R. வணிகத்திற்கு தேவையான மூலதனத்தை இடுபவர் |
| 4. வளம் | S. அனைத்து பௌதீக/ நிதி அம்சங்கள் |

நிரல் A இனையும், நிரல் B இனையும் இணைக்கும் போது சரியாக அமையும் விடை

1. R, P, Q, S 3. R, S, Q, P

2. Q, R, S, P 4. P, R. Q, S

20. பின்வருவனவற்றுள் அண்மிய சூழல் காரணியாகக் கருதப்படுவது
   1. உரிமையாளர்
   2. போட்டியாளர்கள்
   3. ஊழியர்
   4. பொருளாதாரச் சுழல்
21. …………………….. சூழலை அடிப்படையாகக் கொண்டே பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான சந்தை வடிவமைக்கப்படுகிறது
   1. பொருளாதாரச் சூழல்
   2. விஞ்ஞான தொழில்நுட்பச் சூழல்
   3. மக்கட் சூழல்
   4. இயற்கைச் சூழல்
22. கடனுக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பது வணிகத்திற்கு ………………….. ஆகும்
   1. பலம்
   2. வாய்ப்பு
   3. பலவீனம்
   4. சவால்
23. முயற்சியாளர் ஒருவர் சர்வதேச சந்தைகளில் நுழைவதற்கான வாய்ப்பு கிடைத்தல் எத்தகைய சூழல் காரணிக்குள் அடங்குகின்றது
   1. பூகோளச் சூழல்
   2. அரசியல் சட்டச் சூழல்
   3. சமூக மற்றும் கலாசாரச் சூழல்
   4. பொருளாதாரச் சூழல்
24. சந்தை இடத்தில் (Market place) இருந்து சந்தைவெளிக்கு (Market space) படிப்படியாக மாறுவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி
   1. இலத்திரனியல் பணம்
   2. இலத்திரனியல் வியாபாரம்
   3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
   4. நேரில் உற்பத்தி

# வணிகச் சூழல்
# பகுதி 11

01. வணிகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் பெற்றுக் கொள்ளும் பயன்கள் இரண்டு தருக
02. வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக
03. ஊழியர்கள் மத்தியில் ஏற்படும் பலவீனங்களை எவ்வாறு ஒரு நிறுவனத்தின் முகாமை குறைத்துக் கொள்ள முடியும்
04. பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு இரண்டு உதாரணம் தருக
05. பூகோளச் சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?
07. வணிகமொன்றின் புறச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக
08. பின்வரும் சூழற்காரணிகளின் தாக்கங்கள் எவ்வாறான சூழற் காரணிகளுக்குரியது என்பதைக் குறிப்பிடுக
   i. சர்வதேச வணிக உடன்படிக்கைகள் மேற்கொள்ளல்
   ii. கடனுக்கான வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படல்
09. அலங்கார மீன்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் ஒரு முயற்சியாளர் முகங் கொடுக்க வேண்டியேற்படும் அச்சுறுத்தல் இரண்டினைக் குறிப்பிடுக
10. பின்வரும் கூற்றுக்களை நன்கு வாசித்து அவற்றில் பலம் பலவீனம் என்பவற்றைக் குறிப்பிடுக
   (அ) கால மாற்றத்திற்கேற்ப செயற்படாமை
   (ஆ) வணிகச் செயற்பாடுகளை தகுதியான ஒருவரிடம் ஒப்படைத்தல்
   (இ) தரமான உற்பத்திகளை நியாயமான விலைக்கு வழங்குதல்
   (ஈ) வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தாமை
11. மாட்டிறைச்சி உண்பதை இந்து, பௌத்த சமய மக்கள் தவிர்த்து வருகின்றனர். இதற்கு காரணமாக அமையும் சூழற் காரணியைக் குறிப்பிடுக
12. அண்மிய சூழல் காரணிகளைக் குறிப்பிடுக
13. கீழ்வரும் கூற்றுக்களை நன்கு வாசித்து அவற்றுள் வாய்ப்பு அச்சுறுத்தல் எவை என்பதைக் குறிப்பிடுக
   i. போட்டியாளர் தமது உபாய மார்க்கங்களை மாற்றுதல்
   ii. அரசு வரிவிகிதங்களை அதிகரித்தல்
   iii. சர்வதேச சந்தைகளில் நுழைவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்தல்
   iv. புதிய நகரங்கள் உருவாகுதல்
14. நிறுவனமொன்றின் முகாமையாளர் ஒருவர் பலமாக அமையும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக
15. அரசியல் மற்றும் சட்டச்சூழல் காரணிகளுக்கு இரண்டு உதாரணம் தருக

16. வணிகச் சூழலிலுள்ள உண்மையான மாற்றங்களை அறிந்து கொள்வதினூடாக முயற்சியாளர் பெறும் பயன்கள் இரண்டு தருக.

17. உணவகமொன்றின் அகச் சூழல் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A) உணவகத்தில் உணவு தயாரிக்கும் ஊழியர்கள் தரமான உற்பத்திகளை மேற்கொள்கின்றனர்.

B) உணவகத்தை மேலும் விரிவுபடுத்த மேலதிக மூலதனம் தேவையாக உள்ளது.

C) உணவக முகாமையாளர் சிறந்த மானிடம் மற்றும் தொடர்பாடல் திறனைக் கொண்டவராகக் காணப்படல்.

D) உணவு பரிமாறும் ஊழியர்களில் இருவர் வேலைக்கு சமூகமளிப்பது ஒழுங்கீனமாக உள்ளது.

மேற்கூறிய கூற்றுக்களை பலம் பலவீனம் எனக் குறிப்பிடுக.

18. பின்வரும் கூற்றுகளுக்கு பொருத்தமான சூழற்காரணிகளைக் குறிப்பிடுக.

A) சனத்தொகையில் ஆண் பெண் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படல்.

B) கற்றல் கற்பித்தல் ஊடகமாக இணையத்தை பயன்படுத்தல்

19. அண்மிய சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?

20. வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

21. வணிகம் ஒன்றின் முகாமையாளர் பலமாக அமையும் சந்தர்ப்பங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.

22. வணிகம் ஒன்றில் ஊழியர்கள் பலவீனமாகக் காணப்படும்போது அவர்களை பலமாக்க யாது செய்தல் வேண்டும்?

23. அண்மிய சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

**24.** கீழ்வரும் கூற்றுக்களை நன்கு வாசித்து அவற்றுள் வாய்ப்பு/ அச்சுறுத்தல் எவை என்பதைக் குறிப்பிடுக.

a) போட்டியாளர்கள் உருவாகுதல்

b) முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் அரச ஊக்குவிப்புக்கள் அதிகரிக்கப்படல்

c) இயற்கை அனர்த்தங்கள்

d) புதிய நகரங்கள் உருவாகுதல்

**25.** கீழ்வரும் கூற்றுக்களை நன்கு வாசித்து அவற்றுள் பலம்/ பலவீனம் எவை என்பதைக் குறிப்பிடுக.

a) ஊழியர்கள் உரிய நேரத்திற்கு வேலைக்குச் சமூகமளிக்காமை.

b) புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல்

c) வணிகத்தின் அபிவிருத்திக்காக ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடல்

d) காலமாற்றத்திற்கு அமைவாகச் செயற்படாமை

26. பின்வரும் சூழற்காரணிகளின் தாக்கங்கள் எவ்வாறான சூழற் காரணிகளுக்குரியது என்பதைக் குறிப்பிடுக.

a) சனத்தொகையில் ஆண், பெண் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படல்

b) சூரிய சக்தியின் மூலம் இயங்கக் கூடிய இயந்திரங்களை அறிமுகப்படுத்தல்

27. பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு நான்கு உதாரணம் தருக.

28. "மரக்கறி பயிர்செய்கைக்கு சேதனப் பசளை பயன்படுத்துவதை அரசாங்கம் கட்டாயமாக்கும் சட்டம் 2019 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வருகின்றது." இதன்மூலம் வணிகத்தின் புறச்சூழலில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப ஏற்படக் கூடிய வணிக வாய்ப்பு ஒன்றினைக் குறிப்பிடுக.

29. வணிகச் சூழலிலுள்ள உண்மையான மாற்றங்களை அறிந்து கொள்வதனூடாக முயற்சியாளருக்கு பல்வேறு பயன்கள் கிடைக்கமுடியும். அவ்வாறான பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

30. பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான சூழற் காரணிகளைக் குறிப்பிடுக.

I. இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி அறவிடப்படல்

II. சூரிய சக்தியின் மூலம் இயங்கக்கூடிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தல்

# விடய ஆய்வு வினாக்கள்

01. பின்வரும் சம்பவத்தை கவனமாக வாசித்து 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

அருண் என்பவரின் தந்தை சிறியளவில் மதிய போசனம் மற்றும் சிற்றுண்டிகளை தயாரித்து விற்பனை செய்யும் உணவகம் (ஹோட்டல்) ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவரின் உணவகமானது நகர்ப்புறத்தில் பிரபல பாடசாலை மற்றும் அரச அலுவலகங்களுக்கு அண்மையில் அமைந்து காணப்பட்டமையினாலும், உணவுப்பொருட்கள் சுவையாகவும், சுத்தமாகவும், பொருத்தமான விலையில் இருந்தமையினாலும் எந்நேரமும் அவரின் வணிகத்தில் நிறைந்த வாடிக்கையாளர் காணப்பட்டனர்.

அருண் க.பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவில் கல்வி கற்று பரீட்சைக்குத் தோற்றிய பின் தந்தையாரின் வணிகத்திற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினான். அருண் எவ்விடயத்தையும் வித்தியாசமான முறையில் நோக்கும் ஆற்றலும், தான் எண்ணும் ஆக்கபூர்வமான சிந்தனைகளை நேரான மனப்பாங்குடன் செயல் வடிவமாக்கும் திறனையும் இயல்பாகவே கொண்டிருந்தான். உணவகம் சிறியதாகக் காணப்பட்டாலும் அதனை இயற்கையான முறையில் அழகுபடுத்தினான். ஏற்கனவே உதவியாட்கள் இருவர் காணப்பட்டமையினால் அவர்களுடன் இணைந்து அவர்களையும் உற்சாகப்படுத்தி உணவகத்தை எந்நேரமும் சுத்தமாக வைத்திருந்தான். மற்றும் மதிய போசனத்திற்கான உணவுகளை இயற்கைத்தாவர இலைகளைப் பயன்படுத்தி தயாரித்த பெட்டிகளில் நேர்த்தியாக பொதி செய்து அரச அலுவலகப் பணியாட்களுக்கு தனது உதவியாட்களின் உதவியுடன் உரிய நேரத்திற்கு நேரடியாக விநியோகம் செய்தான். சிற்றுண்டி வகைகளை உடலுக்கு தீங்கில்லாத மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமாகத் தயாரித்து விற்பனை செய்தான். உணவகத்தை நீண்ட நேரம் திறந்து வைத்திருந்ததுடன் வாடிக்கையாளருடன் சிநேகபூர்வத் தன்மையுடன் கதைத்து அவர்கள் திருப்தியடையக் கூடிய வகையில் அவர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்தான். அருண் சிறப்பாகத் திட்டமிட்டு முகாமை செய்ததன் காரணமாக உணவகத்தின் இலாபம் அதிகரிக்கத் தொடங்கியதுடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் அருணின் வணிகம் தனக்கென ஒரு இடத்தையும் பிடித்துக் கொண்டது. இவ்வாறு தந்தையின் வணிகத்தை மேலும் விரிவடையச் செய்வதில் அவன் கற்ற பாட அறிவும், அவனின் ஆக்கபூர்வமான புத்துருவாக்கச் சிந்தனைகளும் பெரும் உறுதுணையாக அமைந்தது.

1) மேற்குறித்த விடய ஆய்வின் படி முயற்சியாளருக்குரிய எத்தகைய பண்புகள் அருணிடம் காணப்படுகின்றது.
2) ஆக்கத்திறன் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
3) அ) புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகள் பல காணப்படுகின்றன. ஆவற்றில் அருண் பின்பற்றும் புத்துருவாக்க முறை யாது?
   ஆ) அருணை எவ்வகை முயற்சியாளராக கருத முடியும்?
4) குறிப்பிட்ட வணிகத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தேவையினைக் குறிப்பிட்டு, அதன்மூலம் நிறைவேற்றப்படும் விருப்பங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.
5) குறிப்பிட்ட உணவகத்திற்கு பலமாக அமைந்த இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.
6) அருண் உணவகத்திற்கு வாய்ப்பாக அமைந்த விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7) அருண் தலைவர் என்ற வகிபாகத்தில் எத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கின்றார் என்பதைக் குறிப்பிடுக.
8) அருணிடம் காணப்படும் முயற்சியான்மைத் திறன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9) அருண் சூழல் உணர்வு மிக்கவர் என்பதற்கு எடுத்துக்காட்டான இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.
10) நீர் அருணைப் போன்று ஒரு முயற்சியாண்மையை விரிவுபடுத்த அல்லது ஆரம்பிக்க விரும்பின் அவ் முயற்சியாண்மையில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருவீர்?

02. பளை பிரதேசத்தில் வசிக்கும் கரன் என்பவர் குறிப்பிட்ட பிரதேசத்தில் இலகுவாகக் கிடைக்கக்கூடிய தென்னந்தும்புகளை பயன்படுத்தி தும்பு உற்பத்திகளை பத்து ஊழியர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்கின்றார். இவர் மெத்தை உற்பத்திகளை பாரியளவில் உற்பத்தி செய்யும் தனியார் கம்பனிக்கு தும்புகளை வழங்கி வருகின்றார்.

மேற்குறித்த சம்பவத்திற்கமைய கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

01. கரனின் வணிகம் பொருளாதார விருத்திக்கு வழங்கும் பங்களிப்புக்கள் இரண்டு தருக
02. மேற்குறித்த வணிகத்தில் காணப்படும் பண்புகள் இரண்டு தருக
03. கரன் மேலும் தனது வணிகத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டு தருக
04. தும்புத் தொழிற்சாலையில் காணப்படும் இயந்திரங்களை பழுதுபார்த்தல், இயக்குதல், புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு கரனுக்கு இருக்க வேண்டிய திறனைக் குறிப்பிடுக
05. கரன் முன் மாதிரியாகச் செயற்படும் திறனைக் கொண்டிருக்க வேண்டுமெனின் தனது நிறுவனத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு உதாரணம் தருக.